(ஊ) வட ஆற்காடு மாவட்டம் பள்ளூர் கிராமத்தில் சத்துணவு உண்ட குழந்தைகள் பாதிப்பு.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தாங்கள் இங்கே சொன்னதுபோல இன்றைக்கு கடைசி நாள். நான் ஏற்கெனவே இரண்டு தீர்மானங்கள் கொடுத்திருந்தேன். ஒன்று ஒத்திவைப்புத் தீர்மானம், மற்றொன்று கவன ஈர்ப்புத் தீர்மானம். அவைகள்பற்றி தங்கள் அறையில் வந்து கேட்டேன். தாங்களும் அனுமதித்திருக்கிறீர்கள். கடந்த 15 ஆம் தேதி வட ஆற்காடு மாவட்டம், பள்ளூர் கிராமத்தில் சத்துணவுக் கூடத்தில் உணவு அருந்திய குழந்தைகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் என் அறையில் அனுமதித்தேன் என்று உறுப்பினர் சொல்ல முடியுமா? இது தவறான செய்தி. நான் உறுப்பினரை அவையில் எழுப்பச் சொல்லி அனுமதித்தேனா? கவன ஈர்ப்புத் தீர்மானம் தரப்பட்டிருக்கிறது. தொடர்புள்ள அமைச்சரிடம் அது தரப்பட்டிருக்கிறது. இதுபோன்ற தவறான தகவலைச் சொன்னால் கண்டிப்பாக அனைத்தையும் மறுக்க வேண்டியிருக்கும்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஆண்டு புதிதாக நாங்கள் வந்திருக்கிறோம். தாங்கள் தயவுசெய்து அடிக்கடி எங்களை மிரட்டி உட்கார வைக்க வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: புதிதாக வந்திருக்கிற உறுப்பினர்கள், நன்றாக அனுபவம் வாய்ந்தவர்கள் எப்படிச் செயல்படுகிறார்கள் என்பதை நன்கு கூர்ந்து கவனித்து அதற்குப் பிறகு இங்கே களத்தில் குதித்தால் நன்றாக இருக்கும். (சிரிப்பு)

4. ஒழுங்குப் பிரச்சினை.

உறுப்பினர் ஒருவர் தெரிவித்த தகவலை நிருபிக்கும் பொறுப்பு.

திரு. ரா. சொக்கர்: மாண்புமிகு தலைவர் அவர்களே, On a point of order இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் தவறான தகவலைக் கொடுத்து, அந்தத் தகவல் தவறு என்று மற்ற உறுப்பினரால் சுட்டிக் காட்டப்பட்டால் அது தவறு அல்ல என்று நிருபிக்கும் கட்டாயமும், கடமையும் உறுப்பினரைச்

1989 பிப்ரவரி 21] [திரு. ரா. சொக்கர்]

சார்ந்ததா, அல்லது பேரவைத் தலைவரைச் சார்ந்ததா என்று நான் அறிய விரும்புகிறேன். காரணம், ஏற்கெனவே பாரதப் பிரதமர் அவர்களைப் பற்றி இங்கே சொல்லியதற்கு அது சரியல்ல என்று நிரூபிப்பதற்கான ஆதாரங்களைக் கேட்டிருப்பதாக இங்கே பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: யார் அந்தப் பிரச்சினையை எழுப்பினாரோ அவருக்கு நான் விடை சொல்லியிருக்கிறேன். அதுபற்றிப் பேரவைத் தலைவர் விடை சொல்லிய பிறகு மீண்டும் பேரவைத் தலைவர் விளக்க வேண்டுமா?

3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஊ) வட ஆற்காடு மாவட்டம் பள்ளூர் கிராமத்தில் சத்துணவு உண்ட குழந்தைகள் பாதிப்பு—தொடர்ச்சி.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு தலைவர் அவர்களே, சத்துணவு சாப்பிட்ட சுமார் 300 குழந்தைகள் மயக்கமுற்ற நிலையில், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்றிருக்கிறார்கள். இது சமீபகாலமாக நடைபெறும் ஒன்றாக இருக்கிறது. சத்துணவுக் கூடங்களில் சுகாதார வசதிகள் சரியாக இல்லை. பாத்திரங்களில் ஈயம் பூசுகின்ற நிலைமை இல்லை. இப்படிப்பட்ட காரணத்தால் பல்வேறு பாதுகாப்பற்ற நிலை பல்வேறு கிராமங்களிலுள்ள சத்துணவுக் கூடங்களில் இருப்பதால் அங்கெல்லாம் ஆபத்தான சூழ்நிலையில் சத்துணவுக் கூடங்கள் இயங்குகின்றன. இதுபற்றிப் பத்திரிகைகளில் கூட செய்தி வந்திருக்கிறது. புதிதாகப் பொறுப்பேற்றிருக்கின்ற அரசு சத்துணவுக் கூடங்களை உடனடியாகப் பாதுகாப்பாக வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். சத்துணவைப் பாதுகாப்பான இடங்களில் இனிமேல் தயார் செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த வகையில் ஏழைப் பிள்ளைகளின் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பான ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க இந்த அரசு ஏற்பாடு செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

* **மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம், ஆரணி சரகம் பள்ளூர் கிராமத்தில், உள்ளாட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில்

220 மாணவர்கள் சத்துணவு சாப்பிடலாம் என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 15—2—1989 அன்று 220 குழந்தைகள் சாப்பிட உணவு தயார் செய்யப்பட்டது. பகல் 1-30 மணிக்கு மதிய உணவு பரிமாறியபோது சிறிய அரணை ஒன்று சாம்பாரில் விழுந்ததைக் கண்ட உடனே உணவு பரிமாறுவது நிறுத்தப்பட்டது. உடனடியாக அருகிலுள்ள காஞ்சிபுரம் மருத்துவமனைக்கு பாதிக்கப்பட்ட அந்த மாணவர்கள் எடுத்துச் செல்லப்பட்டனர். அங்கே அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. அதில் 99 பேர்களுக்கு மதிய உணவு வழங்குவது உடனடியாக நிறுத்தப்பட்டது. சிகிச்சை பெற்ற 116 பேர் உடனடியாக, திரும்ப வீட்டுக்கு அனுப்பப்பட்டனர். 5 பேர் மட்டும் சிகிச்சைக்காகப் படுக்கைகளில் அனுமதிக்கப்பட்டு 16—2—1989 அன்று அவர்களுக்கும் எந்த ஆபத்தும் இல்லை என்று மருத்துவர்கள் அவர்களையும் வீட்டுக்கு அனுப்பிவிட்டனர். எனவே, சத்துணவு சாப்பிட்ட அவர்களுக்கு எந்த வகையிலும், எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவருக்கும் ஒரு சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. சத்துணவு சமைக்கப்படுகிற இடம், பரிமாறப்படுகிற இடம் தூய்மையாக வைத்துக்கொள்ளப்பட வேண்டுமென்றும், சத்துணவு சமைக்கப்பட்டு, பரிமாறுவதற்கு முன்பாக சத்துணவு வகைகள் எல்லாம் நல்லமுறையில் மூடி பாதுகாப்பாக வைத்துக்கொள்ளப்பட வேண்டுமென்றும், அங்கு பணியாற்றுகிறவர்கள் இந்த விஷயத்தில் சற்று எச்சரிக்கையாக இருந்து செயல்பட வேண்டுமென்றும் சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. எனவே, இனிமேல் இது போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறாது என்று மாண்புமிகு உறுப்பினருக்கு மாண்புமிகு தலைவர் அவர்களே, தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-30)

(எ) மூடப்பட்டுள்ள பஞ்சாலைகளைத் திறக்க நடவடிக்கை.

திரு. இரா. மோகன்: பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கூட்டத் தொடருடைய கடைசி நாள் இன்று. மிக முக்கியமான பிரச்சினையை உங்கள் மூலமாக அரசின் கவனத்திற்கும், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன். மூடப்பட்ட பஞ்சாலைகளின்